

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி கூடுதலாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27–04– 2025) முகாம் அலுவலகத்தில், அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வனத்துறை மற்றும் காதித் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூடுதலாக மின்சாரத் துறை அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.04.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ் புதிதாக அமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## 174வது பிறந்தநாள் : சர் பிட்டி தியாகராயர் திராவிட மாடல் ஆட்சிக்கு

# வலுவான அடித்தளம் அமைத்தவர்!



## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஏப்.29 -**

**இன்றைய நம் 'திராவிட மாடல்' ஆட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே வலுவான கொள்கை அடித்தளம் அமைத்தவர் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி.தியாகராயர் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பக்கத்தில் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.**

திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி ஜஸ்டீஸ் பார்டியை (நீதிக்கட்சியை) தொடங்கிய மூவர்களில் ஒருவர் (டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர்) சர் பிட்டி தியாகராயர் ஆவார்கள்.

சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் முன்னதாக காங்கிரஸ் பேரியக்கத்தின் மீது பற்று கொண்டு சுதந்திர போராட்டத்தில் தீவிரம் காட்டி வந்தார். பின்னர் அக்கட்சியில் நிலவிய ஆதிக்க மனப்பான்மையை கண்டு கொதித்தெழுந்து வெளியேறினார். 1916ல் தென்னிந்திய நல உரிமை சங்கத்தை தோற்றுவித்தார்.

இதன் சார்பில் 'நீதி' என்ற இதழை நடத்தி வந்தார். இதை தழுவியே 'நீதிக் கட்சி' என்ற பெயரும் உருவானது.

இக்கட்சியின் தலைவராக சர் பிட்டி தியாகராயர் சிறப்பான முறையில் வழி நடத்தி வந்தார். இந்திய விடுதலை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் முழு உரிமை மற்றும் பாதுகாப்பு, பிராமண எதிர்ப்பு ஆகியவற்றை தீவிரமாக முன்னெடுத்து வந்தவர்.



வணிகத்தில் சிறந்து விளங்கிய செல்வந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் தியாகராயர். பி.ஏ. பட்டதாரியான இவர், நெசவாலையை தொடங்கி பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கினார். தான் ஈட்டிய பொருளை ஏழை, எளியவர்களுக்கு வாரி கொடுப்பதில் வள்ளலாக திகழ்ந்தார்.

இதற்கு உதாரணமாக 1876ஆம் ஆண்டு பஞ்சத்தின் போது பசியோடு வந்தவர்களுக்கு உணவு வழங்கிய நிகழ்வை சொல்லலாம். குறிப்பாக தென்னிந்திய வர்த்தக வளர்ச்சி மற்றும் தொழில் பெருக்கத்திற்கு தியாகராயர் அவர்களின் பணிகள் அளப்பரியது. தன்னுடைய சொந்த வருமானத்தில் வண்ணாரப்பேட்டை பகுதியில் ஒரு பள்ளியை 1897ல் தொடங்கினார். அதற்கு 'வட சென்னை செகண்டரிப் பள்ளி' எனப் பெயர் சூட்டினார்.

இங்கு அனைவருக்கும் இலவச கல்வி வழங்கப்பட்டது. இதுவே பின்னாளில் உயர்நிலைப் பள்ளியாகவும், சென்னை 'சர் தியாகராயா கல்லூரி'யாகவும் உயர்ந்தது. இதுதவிர பல்வேறு பள்ளிகளையும், கல்லூரிகளையும், தொழில்நுட்ப பயிற்சி பள்ளிகளையும் நிறுவினார். 1920ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் செயல்பட்டு வந்த நகராட்சி பள்ளியில் முதன் முதலில் 'மதிய உணவு திட்டத்தை' கொண்டு வந்தார்.

மருத்துவக் கல்லூரியில் சேர சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்ற விதியை ரத்து செய்து, பிராமணர் அல்லாத மாணவர்களும் மருத்துவம் படிக்க வகை செய்தார். அண்ணாமலை செட்டியார் உடன் இணைந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். இவ்வாறு அளப்பரிய பணிகளை தனது வாழ்நாளில் செய்திருக்கிறார்.

### கவுன்சிலரானார்!

சர் பிட்டி தியாகராயர் அவர்கள் 1882ஆம் ஆண்டு முதல் 1922ஆம் ஆண்டு வரை மதராஸ் மாநகராட்சி கவுன்சிலராக பணியாற்றினார். 1920ஆம் ஆண்டு முதல் 1923ஆம் ஆண்டு வரை மாநகராட்சியின் முதல் தலைவர் (President) ஆக இருந்தார். அவர் 1910 ஆம் ஆண்டு மதராஸ் சட்டமன்றத்தில் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால், தியாகராயர் முதல்வர் பதவியை ஏற்க மறுத்து, கட்சியின் தலைவராகவே தொடர்ந்தார்.

சர் பிட்டி தியாகராயர், 1909ஆம் ஆண்டு "ராவ் பஹதூர்" பட்டம் மற்றும் 1919ஆம் ஆண்டு "திவான் பஹதூர்" பட்டங்களை பெற்றார். 1921ஆம் ஆண்டு, அவர் "நைட்" (Knight) பட்டம் பெற்றார். சென்னையின் முக்கிய வர்த்தக மையமாக விளங்கும் பகுதிக்கு அவரது நினைவாக 'தியாகராயர் நகர்' என பெயரிடப்பட்டது. மதராஸ் மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தின் முன், அவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

சர் பிட்டி தியாகராயர் அவர்கள் 1852ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் பிறந்தவர். தனது வாழ்க்கையில் பெரும்பகுதியை மக்கள் பணிக்கும், சமூக சேவைக்கும் அரசியல் பணிக்கும் அர்ப்பணித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!

சர் பிட்டி தியாகராயர் அவர்களின் 174வது பிறந்த நாள் நேற்று.

வெள்ளுடைவேந்தர் சர் பிட்டி தியாகராயர் அவர்களின் 174வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு வருமாறு:-

- **கல்விக்கூடங்கள், தெருவிளக்கு கள், குடிநீர் இணைப்பு, மதிய உணவுத் திட்டம் எனச் சென்னை மாநகரின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.**
- **நீதிக்கட்சியின் நிறுவனர்களுள் ஒருவராக இருந்து, தன்னைத் தேடி வந்த முதலமைச்சர் பொறுப்பை மறுத்த மாண்பாளராக உயர்ந்தவர்.**
- **எவருக்காகவும் தன் இயல்பை மாற்றிக்கொள்ளாத 'வெள்ளுடை வேந்தர்' எனப் பெயரும் பெற்றவர்.**

**இன்றைய நம் திராவிடமாடல் ஆட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே வலுவான கொள்கை அடித்தளம் அமைத்த எம் தியாகராயர் வழிநின்று தமிழ்நாட்டின் உயர்வுக்கு உழைப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## கோவை மாவட்டத்தில் ரூ.9.67 கோடியில் சர்வதேசத் தரத்தில் ஹாக்கி மைதானம்!

# ரூ. 82.14 கோடியில் 132 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - ரூ. 29.99 கோடியில் 54 திட்டப் பணிகள்!

### ரூ.239.41 கோடியில் 25024 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து நல உதவிகள் வழங்கினார்!

கோவை, ஏப். 29 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.4.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணி உட்பட 82.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 29.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 54 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 25,024 பயனாளிகளுக்கு 239.41 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாக விளையாட்டு மைதானத்தில் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில், 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணி உட்பட, பொதுப்பணி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சிகள் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் 82.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 புதிய திட்ட பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நாளொன்றுக்கு 2.0 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட தானியங்கி பன்னீர் ஆலை உள்பட பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சிகள் துறை, வேளாண்மை துறை ஆகிய துறைகளின் மூலம் மொத்தம் 29.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 54 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் 586 பயனாளிகளுக்கு 18.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத்துறையின் கீழ் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2,240 மகளிருக்கு 13.73 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் 533 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 4,910 நபர்களுக்கு நிலவரித் திட்ட பட்டாக்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2,772 நபர்களுக்கு இ - பட்டாக்களையும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 700 நபர்களுக்கு இ - பட்டாக்களையும், 690 நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டைகளையும், டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவித்தொகை திட்டத்தின் கீழ் 3,220 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், தாட்கோ திட்டத்துறையின் கீழ் 3,418 பயனாளிகளுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரிய அட்டைகளையும், வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 4,162 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் என பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் மொத்தம் 25,024 பயனாளிகளுக்கு 239.41 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, முனைவர் கணபதி ப. ராஜ்குமார் எம்.பி., க.ஈஸ்வரசாமி, மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா, ஆவின் பொது மேலாளர் டாக்டர். ஆர்.சண்முகம், தமிழ்நாடு ஹாக்கி சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோவையைச் சேர்ந்த கழக பொதுக்குழு உறுப்பினர் மகுடபதி அவர்கள் உடல்நலக்குறைவால் அண்மையில் மறைந்த நிலையில், அவருடைய இல்லத்துக்குச் துணை முதல்வர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று அவரது திருவுருவப்படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி குடும்பத்துக்கு ஆறுதலை தெரிவித்தார்.

## மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சராக நியமனம்!

# தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்!

### அமைச்சர்கள் எஸ்.முத்துசாமி – எஸ்.எஸ்.சிவசங்கருக்கு கூடுதல் இலாகா ஒதுக்கீடு!

**சென்னை, ஏப். 29-**

**தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.**

இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொன்முடி வகித்த வனத்துறை, பால் வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜி வகித்து வந்த மின்சாரத் துறை, அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கருக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வி.செந்தில்பாலாஜி கவனித்து வந்த மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, அமைச்சர் முத்துசாமிக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

பத்மநாபபுரம் எம்.எல்.ஏ., மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார். அவருக்கு மீண்டும் பால் வளத்துறை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆளுநர் மாளிகையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டம் தி.மு.க. அலுவலகம் கலைஞர் இல்லம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தொகுதிப் பொறுப்பாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன், ரேகா பிரியதர்ஷினி, நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், துணை ஒருங்கிணைப்பாளர்கள் சர்தார்ஜான், சுதா ஜெயக்குமார், பூபதி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.